முருகப்பெருமான் துணை

**மகான் டமாரானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.07.2023**, சனிக்கிழமை

1. பிரணவ சபை கண்ட அரங்கனே
   பிரணவப்பிரியனின் அவதாரமே
   சரவண சோதியே நமோ நம என
   சகலருக்கும் ஞானமருளுகின்ற
2. அருளுகின்ற ஆறுமுக ஞானியே
   அண்ணலே உன் பெருமை கூறி
   வரமென சோபகிருது மிதுன திங்கள்
   வல்லமையான மூவேழீர் திகதி காரிவாரம்

**(சோபகிருது வருடம் ஆனி மாதம் 23 ம் நாள், 08.07.2023, சனிக்கிழமை)**

3. வாரமதில் அறிவுரை ஆசி
   வழங்குவேன் டமாரானந்தர் யானும்
   சோரமில்லா நல்லுலகம் அமைய
   சுத்தநெறி காட்டி அருளுகின்ற
4. அருளுகின்ற அரங்கன் வழி
   ஆறுமுகப் பெருமான் ஞானவழி
   அருளுகின்ற அரங்கன் நெறி
   ஆறுமுகனார் ஞான நெறி
5. நெறிதனை உலக மக்கள்
   நிலவுலகினில் ஏற்றுவர
   வறுமை பசிபிணி அண்டா
   வளமிக்க வாழ்வை அடைவர்
6. அடைவர் பகை வஞ்சமில்லா
   அமைதி பாதுகாப்பு நிறைந்த
   தடையில்லா வளர்ச்சிக் காண்பர்
   தனக்கென தனித்துவம் கூட்டி

7. கூட்டியே உலக மாந்தர்களும்
குருவரங்கன் ஆசிபெற்றவர்கள்
கட்டமிலா ஞானவான்களாக
கருணைமிக்கவர்களாக மாறுவர்
8. மாறுதலை செய்யும் வண்ணம்
மகத்துவம் ஆற்றல் கூடி
தேறுவர் ஞானிகளாகவே
தேசிகன் அவதார நோக்கம்
9. நோக்கம் நிறைவேற்றும் படி
நிலமதனில் சேவை ஆற்றி
ஆக்கமுடன் தருமம் வளர்ப்பர்
அரங்கனின் அம்சமாக மாறி
10. மாறியே அற்புதம் கலியினில்
மகான்கள் ஆட்சி வரும்படி
அறத்தின் சேவை பெருக்கி
அகிலத்தில் ஆறுமுகனார் வெளிப்படும்
11. வெளிப்படும் ஞானசித்தர் காலம்
வையகம் கண்டிடும் வண்ணம்
தெளிவுபட சேவை ஆற்றி சிறப்பர்
தெரிவித்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–